## பெருநகர சென்னை மாநகராட்சி
## செய்தி வெளியீடு

**செ.வெ. எண்.75** **நாள். 07.06.2019**

**பெருநகர சென்னை மாநகராட்சி சாதாரண உள்ளாட்சித் தேர்தல் வரைவு வாக்குச்சாவடி பட்டியல் பொதுமக்கள் பார்வைக்கு மாநகராட்சி அலுவலகங்களில் வைக்கப்படும் என ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு நடைபெறவுள்ள சாதாரண உள்ளாட்சித் தேர்தலில் 200 வார்டுகளுக்கான வார்டுவாரியான வாக்குச்சாவடி பட்டியல் தயாரிக்கப்பட்டு, ஆண் வாக்காளர்களுக்காக 78 வாக்குச்சாவடிகளும், பெண் வாக்காளர்களுக்காக 78 வாக்குச்சாவடிகளும் மற்றும் அனைத்து வாக்காளர்களுக்காக 5564 வாக்குச்சாவடிகளும் ஆக மொத்தம் 5720 வாக்குச்சாவடிகள் உருவாக்கப்பட்டுள்ளது.

வரைவு வாக்குச்சாவடி பட்டியல் 10.06.2019 அன்று மாவட்ட தேர்தல் அலுவலர் / ஆணையாளர் அலுவலகம், மண்டல அலுவலகங்களிலும், அனைத்து வார்டு அலுவலகங்களிலும், வாக்காளர் பதிவு அலுவலர் மற்றும் வருவாய் அலுவலர் அலுவலகத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படும் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,
பெருநகர சென்னை மாநகராட்சி**